2017 ஜூன் 22]

காக்க வேண்டியது அவசியமாகிறது. நீங்கள் சொல்வதுபோல் யாரும் தப்பிவிட முடியாது. நீதிமன்றத்திற்குச் சென்று stay order *வாங்கியோ, நீதிமன்றத்தில் அபராதம் கட்டியோ, தப்பிக்கின்ற வேலை இனிமேல் நடக்காது. கலப்படம் செய்கிறவர்கள், அதிலும் பாலில் கலப்படம் செய்கிறவர்கள் எவராக இருந்தாலும் சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் தண்டிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கண்டிக்கப்பட மாட்டார்கள், நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

திருக்கோயில் புனரமைப்பு

***16238—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, சின்னமட்டாரபள்ளி ஊராட்சியிலுள்ள அருள்மிகு பஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியத்தின் மறுபிறப்பு, சாதனையின் உச்சரிப்பு, தமிழும், தமிழ்நாடும் வாழ தன்னையே தியாகம் செய்து, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று வாழ்ந்து வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழக முதலமைச்சராகச் சிறப்பாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, எனது பதிலை இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *பர்கூர் தொகுதி, சின்னமட்டராபள்ளி ஊராட்சியிலுள்ள அருள்மிகு பஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், சின்னமட்டராபள்ளி ஊராட்சி, மேடுகம்பள்ளி, அருள்மிகு பஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலில் மூலவர் பஸ்வேஸ்வரர் மற்றும் விநாயகர் சன்னதிகளில் விமானங்களில் உள்ள சுதைகளை மராமத்து செய்து பஞ்சவர்ணம் தீட்டுதல், அர்த்தமண்டபம் மற்றும் மகாமண்டபத்திற்கு கல்பதித்தல் ஆகிய மராமத்துப் பணிகளைச் செய்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று வாழ்ந்து மறைந்து, வங்கக் கடலோரம் தனது அரசியல் ஆசான் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவருக்கு அருகில் மீளாத் துயில் கொண்டு, உறங்கிக் கொண்டிருக்கும், உலகெங்குமுள்ள தமிழர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தன்னிகரில்லா தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களில் என் தலையை வைத்து வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லதொரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கின்ற காலத்தில் தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு கோயில்களைப் புனரமைத்து, குடமுழுக்குச் செய்கின்ற பணியைச் சிறப்பான

2017 ஜூன் 22]

முறையில் செய்து வந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கின்றது இந்த அரசு. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில், நான் கொடுத்த கோரிக்கையை ஏற்று, கோயிலை புனரமைத்து, குடமுழுக்குச் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

கால்நடைக் கிளை நிலையம்

***13503—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, M. வெள்ளாளப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களில் எந்த முதலமைச்சரும் செய்யாத ஓர் அற்புதத் திட்டத்தின்மூலம் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கி, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், இதுமாதிரி செய்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இல்லை. இல்லை. இப்படியெல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) அதிகமாகப் பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, ஏழைகளின் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்த முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு*